57

உ

ஸ்ரீவாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை ௩.] 1915-ம் ஆூ மார்ச் மீ [இதழ் ௩.

இலௌகிகப் பகுதி.

இசைத் தமிழ்.

உலகத்தில் உள்ளமொழிகள் பலவற்றினுஞ் சிறந்ததும், இனிமையுற்றதும், நிரம்பிய இலக்கணம் முதலிய பல சிறப்புக்கள் அமையப்பெற்றதும் தமிழ்மொழி ஒன்றேயாம். அம்மொழி பல்லாயிரம் யாண்டுகட்கு முன்னரே தமிழ்ச் சான்றோர்களாய பாண்டியர்களால் வளர்க்கப்பட்டு மிக்க மேம்பாடு பெற்றதாம். எல்லா மொழிகளுக்கும் தனிப்பெயரே யமைந்திருக்கின்றது. இப் பெருமைவாய்ந்த மொழிக்கோ முத்தமிழ் என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது. இச் சிறப்புத் தோன்றவே, நஞ் சைவசமயாசிரியச் செல்வர்களது தெய்வதப் பாவினுள், "முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்" என்றும், கல்லாடத்துப் பாவினுள், "முத்தமிழ் நான்மறை முளைத்தருள் வாக்கால்" என்றும், ஔவையார் நல்வழிப் பாவினுள், "சங்கத் தமிழ்மூன்றுந் தா" என்றும் விதந்து கூறப்பட்டுள்ளதென்க.

தமிழர்கள் பழைய காலத்திலேயே இலக்கண ஒழுங்கு அமையப் பேசுவதிலும், பாடுவதிலும், கூத்தாடுவதிலும் சீராகத் திருந்தியுள்ளார்களென்பது நன்றாய் விளங்குகின்றது. மேலும் இவர்கள் உழவு நூல், இன்ப நூல், வானநூல், கணிதநூல், தாதுநூல், மருத்துவநூல் முதலிய

வற்றுள்ளும் செவ்வையாய் ஆராய்ந்திருந்தனர்க ளென்பது நன்ருய்த் தெரிந்திருந்தாலும், இங்கு நாம் இசைநாடகப் பகுதியைப் பற்றிச் சிறிது சொல்லப் புகுந்தமையால், அவைகளைப்பற்றி வேண்டுழி விரித்துப் பின்னர் ஒருகால் பேசுவாம்.

இயற்றமிழ் நான்கு பிரிவுபடும். அவை எழுத்து, சொல், யாப்பு, பொருள் என்பனவேயாம். பிற்காலத்தவர்கள் ஐந்து பிரிவென்பர். அதனை மூன்று சங்கத்துச் சான்றோர்களும் கொள்ளாரென்க. அதனை விரித்து நச்சினர்க்கினியர், பொருளதிகாரத்து உவமையியலுள்ளும், நக்கீரனர், இறையஞ ரகப்பொருள் முதல் சூத்திரத்துரையுள்ளும் விளக்கியிருக்கின்றனர் என்க. அவற்றுள், இக் காலத்தில் எழுத்தும் சொல்லும் யாப்பும் ஒரு சார் வழங்கி, மற்றது வழங்காது மயங்கிற்று. நிற்க,

இசைநாடகப் பகுதிகளைப் பற்றிப் பேசுவோமென்னிலோ, அது வெறும்வாயை மெல்லுவான் போன்றதா யிருக்கின்றது. ஏனென்ருல், தமிழ் இசைநூல்களும், கூத்து நூல்களும் இக்காலத்து அகப்படுவது இன்மையாலென்க. மேற்சொல்லிய இசைநாடகத் தமிழ்கள் ஒளி மழுங்கி மறைந்தது எக் காரணத்தால் என்று ஆராயின், பல வேற்று நாட்டவர்கள் குடியேறியதாலும், ஜினர்கள், புத்தர்கள் தம்தம் மதங்களைப் பரவச் செய்யவேண்டுமென்று பல வாசர்களைத் தம் வயப்படுத்தியதாலும், சங்கத்தார்க்குப் பின்பு குடியேறிய பல ஆரியர்கள் நம் மொழியைத் தன்னியல்பு குன்றச்செய்யவேண்டும் என்று எண்ணிய நுண்ணிய கருமத்தாலும் என்றே நினைக்கின்ரும். பல இசைநூல்களும் நாடக நூல்களும் ஆரிய நூல்கட்கு மாருயிருப்பதால் அவைகளைப் பிற்காலத்தவர் அழித்தும், நூல்களில் தமிழப்பகுதியவாய இசைக் கூத்துகளைப் பற்றியவைகள் இருந்தால் எடுத்தும் விட்டனர்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. உதாரணமாக, சிலப்பதிகாரத்தில் கானல்வரி முதலிய பாகங்களுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் காட்டிய இசைக் குறிப்புகளின் செய்திகள் கிடைக்கா தொழிந்ததேயாமென்க. ஆயிரத்தைஞ்ஞூறியாண்டுகட்கு முன்னர் நம்பியாண்டார் நம்பியாரால் திருமுறை கண்டவணுகிய இராசராச அபய குலசேகரச் சோழன் காலத்திலேயே பண்களின் பெருமை கிடைப்ப தருமையாயிற்று. ஆயிரம் யாண்டுகட்கு முந்தி யிருந்தாராய அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்திற்கு உரையெழுத இசை நூல்கள், நாடகநூல்கள் கிடைக்காது சிறிது நூல்களைக்கொண்டு ஒருவாறு உரை எழுதினர் என்க. அவ் வுரைகளில் இசைப்பகுதியவாய உரைகள் பொருமை மேற்கொண்டோர்களாலே எடுக்கப்பட் டொழிந்தன வென்பது தெற்றென விளங்கு

கின்றது. ஆகையினாலே நமக்கு இப்போது கிடைக்கக்கூடிய சில நூல்களாகிய பரத சூடாமணி, குடிமிநாதன் பரதம், தாண்டவக் கட்டளை, சுத்தாநந்தப் பிரகாசம், சிலப்பதிகாரம், கல்லாடம் முதலிய நூல்களில் தோற்றப்படுகின்ற சிற்சில இசையின் இலக்கணங்களைப் பற்றிச் சிறிது விளக்கியெழுதுவாம். அன்றியும், இக்காலத்தில் கிடைக்கக் கூடியதாகிய இசைநுணுக்கம், இசைமரபு என்னும் நூல்கள் சிலர் கைவயப்பட்டுக் கிடக்கின்றமையால், அவை வெளிவரல் அருமையேபோலும். நாடக நூலுள்ளும் சில அவ்வாறாயின. இக்காலத்தவர்களோ, சொல்லின்பம் சுவையின்பங்களைக் கருதாது ஒலியின்பங்களையே கருதுவாராய் இன்புறுகின்றபடியால் அவர்கள் எப்பாஷையின் இராகங்களாயினும் அவைகளையே விரும்புவாராயினர். இங்கு வேறுபாஷைகளின் இராகங்களைக் கேட்கக் கூடாதென்பது எம் கொள்கையன்று. நம்முடைய தமிழ்ப் பண்களும், பண்ணியங்களும், திறங்களும், திறத்திறங்களும் இருக்கின்றபோது அவைகளை யாராய்ந்து பார்த்தால் மிக்க நலமாகுமென்று நினைந்து, எமக்குக் கிடைத்த சில விஷயங்களால் தமிழ் இசைகளாகிய பண்களையும், அவற்றின் உபகருவிகளாகிய தாளங்கள், முழவுகள், யாழ்கள் முதலிய சிலவற்றின் இலக்கணங்களையும் இப் பத்திரிகையில் எழுதத் தொடங்கினோம்.

இசைகள் ஏழு எழுத்தால் முதல் தோற்றுகின்றன. அவை யாவன: குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாம். அவைகட்குக் குறியாகத் தமிழ் நெடுங்கணக்கில் ச, ரி, க, ம, ப, த, நி, என்னும் எழுத்துக்களைப் பண்டைய முன்னோர்களாகிய அகத்தியனார், சிகண்டியார் முதலாயினர் வழங்கிவந்தனர் என்க. இது அறியாச் சில ஆரியரும், வடுகர் முதலாயினரும் ச, க, த, என்னும் எழுத்துக்கள் மந்த மத்திம தாரம் ரூபமாகத் தமிழில் இல்லை, ஆகையால் தமிழில் இசையெழுத முடியாதென்கிறார்கள். அப்படியாயின், சதுச்சுருதி, சட்சுருதி, அந்தரகாந்தாரம், பிரதிமத்திமம் முதலியவைகளுக்கு மற்றைய பாஷைகளில் எழுத்து உண்டா என்று எண்ணிப்பார்த்தால் தெரியும்.

குரலுக்கு மாத்திரை நான்கும், துத்தத்திற்கு மாத்திரை நான்கும், கைக்கிளைக்கு மாத்திரை மூன்றும், உழைக்கு மாத்திரை இரண்டும், இளிக்கு மாத்திரை நான்கும், விளரிக்கு மாத்திரை மூன்றும், தாரத்திற்கு மாத்திரை இரண்டுமாக இசைக்கவேண்டியது.

(வரும்.)

கச்சித் தமிழன்.

60

பால சிக்ஷை.

4-வது 5-வது வயது.

அறிவுப் பயிற்சி.

கவனம்.

(வெண்டாமரை ௩, 32-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு பொருளையும் அதன் தத்துவங்களையும் நன்கு அறிதற்கு நமது மனோசக்தியை வேறு பொருள்கள்மீது செல்லவொட்டாது தடுத்து அவ்வொரு பொருள்மீது மாத்திரம் முற்று மமைத்தல்வேண்டும்.

சித்தப்பிரமை கொண்டவர்களும், பிறவி மூடர்களும் அறிவிலிகளா யிருத்தற்குக் காரணம், அன்னவர் சிறிது நேரமேனும் ஒரே பொருளை உற்றுயோசிக்கும் சக்தியற்றவர்களாய் இருப்பதேயாம். இவர்கள் மனோபாவம், ஒருபூவின் மீதேனும் அமர்ந்து நில்லாது மலர் மலராய்த் தேடித் தேடித் திரிந்துழலும் வண்டினங்களின் இயல்புடையது. குழந்தைகளின் மனோசக்தியும் இத்தன்மையதே.

அவர்கள் கவனத்தை நாம் போதிக்க விரும்பும் விஷயத்தில் இராகித்து அதில் சற்று ஊன்றி நிற்கும்படி செய்யாவிடில், அவர்கட்கு அறிவுப் பயிற்சிசெய்வதற்கு இயலாது. குழந்தைகளின் கருத்தைத் தாங்கள் கற்கும் விஷயத்தில் ஊன்றிநிற்கச் செய்வதற்கு நாம் அனுசரிக்கவேண்டிய முக்கிய உபாயங்கள் சில உண்டு.

மனதை ஏககாலத்தில் பல பொருள்கள்மீது சிதறவிடாதபடி நாம் கற்பிக்கும் அவ்வொரு பொருளின்மீது மாத்திரம் நிலைநிறுத்தல்வேண்டும். உதாரணமாக, நாலைந்து வயதுச் சிறு குழந்தைக்கு எழுத்துப்பயிற்சி செய்விக்கும்போது, அகரமுதல் னகரமெய்வரையில் எல்லா வெழுத்துக்களையும் பழைய முறைப்படி ஒருமிக்கப் போதிக்க முயலுதல் முற்றுந் தவறு. சப்தரூப பேதங்களுள்ள இத்தனைப் பொருள்கள்மீதும் அவர்கள் கவனம் சிதறிப்போய்ப் பயனற்றுப் போகின்றது. அந்தோ! பாவம்!! எத்தனையோ பாடசாலைகளில் "அன, ஆ வென்ன, கன, காவென்ன" என்று அரிச்சுவடி யெழுத்துக்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக மூச்சுவிடாது நாவினீர் வறள, சிறு குழந்தைகள் காலையிலும் மாலையிலும் வியர்த்தமாகக் கதறிவருதலைக் காண்கின்றோம். இத் தவறான போதனமுறை, படிப்பில் ஆயாசத்தையும் தாம் கற்பதில் அருவருப்பையும் ஏற்படுத்தி, குழந்தைகள் எழுத்துக்களை யெழுதப் படிக்கப் பல வருஷங்கள் செல்வதற்கும் காரணமாகின்றது.

ஏக காலத்தில் அரிச்சுவடி யெழுத்துக்களையெல்லாம் ஒருமிக்கப் போதிப்பதற்குப் பதிலாக அவைகளில் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, அவ் வொவ்வொன்றின்மீது மாத்திரம் குழந்தைகளின் கவனத்தை ஊன்றச்செய்யின் அதை வெகு சுலபத்தில் அறிந்துகொள்வார்கள். இவ்வாறு முறையாக எழுத்துக்களில் ஒன்றை நன்றாக எழுதப் படிக்கத் தெரிந்துகொண்டபிறகு மற்றொன்றாகக் கற்பித்துவரின், சில மாதங்களில் அவைகளை முற்றும் அறிந்துகொள்ளச் சாத்தியமாகும்.

குழந்தைகளின் கவனசக்தி மோப்பக் குழையும் அனிச்சமலர் போல நொய்மையுள்ளதென்றோம். அஃதேனெனின், ஒரே பொருள் மீது சிறிதுகாலங்கூட ஊன்றி நிற்கும் தரத்த தன்று. வெகு விரைவில் களைத்து, அறியும் சக்தியை யிழந்துபோகக் கூடியது. ஆதலால் போதிக்கும் விஷயங்களைச் சற்றுக்குச் சற்று மாற்றி, கவனத்தின் ஆகர்ஷண சக்தியைப் புதுப்பித்துக்கொண்டே வரவேண்டும். இதற்காகத்தான் ஒழுங்கமைந்த பாடசாலைகளில், மணிக்கு மணிக்கு வெவ்வேறு பாடங்களைப் போதிக்கவேண்டுமென்ற ஏற்பாடு இருக்கின்றது.

நாம் போதிக்கும் விஷயங்கள்மீது குழந்தைகட்குப் பிரீதியேற்படும்படி செய்வது, அவர்கள் கவனத்தைக் கைவசப்படுத்திக் கொள்வதற்குச் சிறந்த ஒரு வழியாகும். எவர்க்கு ஒன்றின்மீது பற்றுண்டோ அதன்மீது அவர் கவனம் இயல்பாகச் செல்லுமென்பது அனுபவ வுறுதி. புத்தகங்களில் சித்திரங்களமைத்தும், நீதிமுறைகளைக் கதாரூபமாகப் போதித்தும், வெறுஞ்சொற்கட்குப் பதிலாகப் பொருள்களைக் காண்பித்துப் பதங்களைக் கற்பித்தும் வருதலெல்லாம், குழந்தைகளுக்கு அவற்றின்மீது பிரீதியையும் அதனால் கவனத்தையும் வளர்த்தற்பொருட்டேயாம். குழந்தைகளின் மனதை வேறு விஷயங்களில் சிதறடிக்கக் கூடிய சந்தர்ப்பங்களையெல்லாம் அவர்கட்கு அறிவைப் பயிற்றும்போது அப்புறப்படுத்தி அகற்றிவைத்தல் அத்தியாவசியகமாகும்.

இதை நோக்கியே போதனுமுறையில் கைதேர்ந்த கிரேக்கர், மாணவர்களின் கவனம் பிறவிஷயங்களில் சிதறிக் கலவரப்படாவண்ணம், தம் பாடசாலைகளைப் பெருந்தோட்டங்களின் (அக்காதெமி) மத்தியில் அமைப்பர்.

திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எனப்படும் சுதேச பாடசாலைகள் இதுவிஷயத்தில் எத்துணையோ குறைவுபாடுள்ளவைகளாக இருக்கின்றன. பாதையில் ஓயாது நடைபெறும் பல்வேறு மனோகர சம்பவங்கள்மீது குழந்தைகள் கவனம் செல்லாது கற்பிக்கும் பாடங்களின்மீது

மாத்திரம் ஊன்றிநிற்றல் அசாத்தியமன்றோ! உபாத்தியாயர் ஒன்று போதிக்க, மாணவன் கவனம் மற்றொன்றில் தாவிநிற்க, கடைசியாகப் பாடத்தின்பயன் "எலியின் வால்மாத்திரம் இன்னும் நுழையவில்லை" என்றுரைத்த கதையாக வல்லவோ முடியும்.

சுருங்கக்கூறின், குழந்தைகளின் கவனம் ஒன்றின்மீதும் ஊன்றி நிற்கும் தன்மையதன்று, சிறிது நேரத்தில் அபலப்படுதற்பாலது, அதை நாம் கவருதற்கு, போதிப்பதன்மீது பிரீதியை ஏற்படுத்துதலும், சிதறடிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை யெல்லாம் அகற்றுதலும் அத்தியாவசிகம்.

(தொடரும்.)

த. பு. அம்மணியம்மாள்.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ந, 38-ம் பக்கத் தொடர்ச்சி.)

அத்தியாயம்–2.

என் ஐந்தாம் பிராயத்தில் எனக்கு ஒரு தங்கை பிறந்தனள். அவளுக்கு, காந்திமதி என்ற பெயரிடப்பட்டது. நமது நாட்டு ஸ்திரீகளில் அநேகருக்குப் பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளிடத்தில்தான் அதிக பிரீதி. அவ்வாறே ஆண்டாளம்மாளுக்கு என் தங்கையைவிட என்னிடத்தில்தான் அதிக பிரேமை.

என் தாய் தந்தைகள் என்னை மிகச் செல்வமாக வளர்த்துவிட்டார்கள். பதினொரு வயது வரையில் நான் பாடசாலைக்குப் போகவில்லை. வீட்டை விட்டுத் தனியாய் எங்கேயும் போனதில்லை. என் அன்னையும் தந்தையுமே எனக்கு வீட்டில் கல்வி கற்பித்தார்கள். ஆனால் நான் பாடசாலைக்குப் போயிருந்தால் அவ் வயது வரையில் என்ன கல்வி பெற்றிருப்பேனோ அதற்கதிகமாகவே யிருந்தது என் பெற்றோர்கள் எனக்களித்த கல்வியின் அளவு. என் தங்கையின் நான்காம் வயதிலிருந்து என் தந்தை அவளையும், என் அம்மாளையும், என்னையும் ஞாயிற்றுக்கிழமைதோறும் மாலையில் கடற்கரைக்கு அழைத்துப்போவார். தங்கள் பந்துமித்திரர்கள் அகங்களில் நிகழும் விவாகம் முதலிய சுபச்சடங்குகட்கும், திருவிழாக்

களுக்கும் என் மாதா பிதாக்கள் என்னையும் என் தங்கையையும் அழைத்துக்கொண்டு போவார்கள். மற்றக்காலங்களில் நான் வீட்டிலேயே அடைபட்டிருந்தேன். அங்கே என் விளையாட்டுத்தோழர்கள் என் தங்கையும் அம்மாளுந்தான்.

பதினேராம் வயதில் என் தகப்பனுர் ஆங்கில பாடசாலையில் ஏழாவது வகுப்பில் என்னைச் சேர்த்தார். சேர்த்துவிட்டு அவர் என்னைப் பிரிந்துபோன கால் மணி நேரத்துக்குள் நான் அழுதுவிட்டேன். எனக்குப் பயமாயும் லஜ்ஜையாயுமிருந்தது. பின்பு உபாத்தியாயர் பல அன்பான வார்த்தைகள் சொல்லி என்னைத் தேற்றினர். பள்ளிக்கூடத்தில் சிறுவர்களுடைய இரைச்சல்கள், ஓட்டங்கள், ஆட்டங்கள், வாய்ச்சண்டைகள், கைச்சண்டைகள் ஒன்றும் எனக்குப் பிடிக்கவேயில்லை. இந்தப் பாழும் பள்ளிக்கூடத்தை விட்டு அம்மாளிடத்தில் போக எப்பொழுது மணி அடிக்கும் என்று எண்ணிக்கொண்டே யிருப்பேன். பாடசாலை எனக்கு ஒரு சிறைச்சாலையாகவே தோன்றியது. ஆனல் நாளடைவில் பள்ளிக்கூடத்தின்பால் எனக்கிருந்த வெறுப்பும் பயமும் கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைந்தது. நான் என் பாடங்களை எப்பொழுதும் ஒழுங்காய் வாசித்துக்கொண்டு வருவேன். உபாத்தியாயர் போதிப்பதை யெல்லாம் மிகக் கவனமாய்க் கேட்பேன். ஆகையால் உபாத்தியாயர்கள் என்னிடம் விசேஷ அபிமானங் கொண்டனர். அவர்கள் பல அன்புரை கூறி என் புத்தி நுட்பத்தையும் உழைப்பையுங் கொண்டாடியது கல்வி அபிவிர்த்தியில் எனக்குப் பொங்குகின்ற உருசியையும் அழியாத ஊக்கத்தையும் அளித்தது. அன்றியும் சாந்த குணமுள்ள சில சிறுவர்களோடு விளையாடிக் களிக்கவும் கற்றுக்கொண்டேன். இவ்வாறுகப் பள்ளிக்கூடவாழ்க்கையில் எனக்கிருந்த பயமும் வெறுப்பும் முற்றுந் தொலைவதற்கு ஒரு வருஷம் சென்றது.

வாய்மை, அடக்கம், அற்பப் பிராணிகளிடத்திலும் இரக்கம் என்ற குணங்களை என் குழந்தைப்பருவத்திலிருந்தே என் உள்ளத்தில் ஆழப்பதித்து வளர்த்தனள் என் அம்மாள். ஆகையால், மலரில் மணமும், நெருப்பிற் சூடும் மிளிர்ந்திருப்பதுபோல் இந்த நற்குணங்கள் என்னைப்பிரியாத இயற்கைக் குணங்களாயின. என் சரித்திரத்தில் பல இடங்களில் இவ்வாறு தற்புகழ்ச்சி கூறும்படி நேரிடும், நேயர்கள் க்ஷமிப்பார்களாக. பள்ளிக்கூடத்தில்தான் நான் சில நல்ல சிறுவர்களோடு விளையாடுவேன். வீட்டுக்கு வந்தால் என் அம்மாளோடும் தங்கையோடும் உரையாடுவதும், என் தகப்பனுர் ஆஞ்ஞையின்படி தேகப்பயிற்சி செய்வதும், என் பாடங்களை வாசிப்பதுந்தான் என் வேலை.

[ஆசிரியனுரை: கதாநாயகன் இவ்வாறு தன் வீட்டு வாழ்க்கையையும் பாடசாலை வாழ்க்கையையும் பற்றிய இன்னும் பல விஷயங்களை விரிவாகக் கூறியிருக்கின்றான். அவைகளை விட்டுவிட்டுக் கதையைச் சார்ந்த முதல் முக்கிய சம்பவத்தைச் சாற்றத் தொடங்குகின்றோம்.]

நான் 'மெட்ரிகுலேஷன்' பரீட்சையில் தேர்ச்சி பெற்றேன். 'காலேஜில்' வாசித்துக்கொண்டிருந்தேன். வயது பதினாறு. பங்குனி மாதம். ஒரு நாள் மாலைப்பொழுது காலேஜிலிருந்து இடது கையில் புத்தகங்களோடும் வலது கையில் குடையோடும் வீட்டை நோக்கிக் கடைத் தெரு வழியாக வந்துகொண்டிருந்தேன். திடீரென ஒரு பெருங்காற்று வீசியது. சற்று நேரத்தில் அபரிமிதமாகக் கோடை மழை பெய்யலாயிற்று. குடையை விரித்துப் பிடித்துக்கொண்டேன். காற்றும் மழையுங் கலந்து குலாவின. அவைகளின் உக்கிரத்திலிருந்து என் குடையைக் காப்பதற்காக மிகத் தந்திரமாக அதைப் பல திசைகள் முகமாக அசைத் தசைத்துப் பிடித்துக்கொண்டு நடந்தேன். சிறிது நேரத்தில் என் கண் முன் ஒரு காட்சி தோன்றிற்று. சுமார் பத்து வயதுள்ள ஒரு சிறுமி தன் தோளிற் சார்த்திப் பிடித்துக்கொண்டிருந்த சிறு குடை பின்புறமாகச் சுருங்கிற்று. வீதியிற் சென்ற சில சிறுவர்கள் அதைப் பார்த்துச் சிரித்தார்கள். இரண்டு பெரிய மனிதர்கள் கூடச் சிரித்தார்கள். பெண்ணோ தன் தோளிலிருந்த குடையை முன்புறமாகச் சுருக்க முயன்றாள். அவளால் இயலவில்லை. ஆகையால் அந்த ஈனக்குடையைக் கையில் வைத்துக் கொண்டே தன் தலை உடையாவும் நனைய விரைந்து நடந்தாள். இக்காட்சியைக் காண என்னாற் சகிக்கக் கூடவில்லை. துரிதமாக ஓடினேன். அச் சிறுமியருகே சென்றேன். அவளும் நானும் என் குடையின் பாதுகாவலில் நின்றோம். பெண் என் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள். புன்னகையுடன் என் உதவியை ஏற்றுக்கொண்டு "இதை ஒழுங்காக்கிக் கொடுங்கள்" என்று அவலக்ஷணமாயிருந்த தன் குடையை என் கையில் கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்டு "இவைகளைச் சற்றுநேரம் வைத்திரு" என்று சொல்லி என் புத்தகத்தையும் குடையையும் அவளிடம் கொடுத்தேன். அவள் குடையின் அலங்கோலத்தை நீக்கி, ஒழுங்காய்ச் சுருக்கி அவளிடம் கொடுத்துவிட்டு என் குடையையும் புத்தகங்களையும் திரும்பப் பெற்றுக்கொண்டேன். பின்பு "உங்கள் வீடு எங்கே இருக்கிறது?" என்று அவளைக் கேட்டேன். "மகாலிங்கேசுவரர் கோயில் வீதி 61-ம் நெ. வீடு" என்றாள். அந்த வீட்டு வாசல் வரையில் அவளை அழைத்துக் கொண்டுபோய் விட்டுவிட்டு நான் தனியாய் என் அகத்திற்கு வந்து விட்டேன். வழியில் வேறொரு வார்த்தையும் நான் அவளோடு பேச

65

வில்லை. இவ்வளவிற்கும் காரணம் என் நெஞ்சத்தில் என் அம்மாள் வளர்த்த இரக்கம் என்ற குணமேயன்றி வேறல்ல.

ஐந்தாறு மாதங்களாயின. முற்கூறிய சம்பவத்தை நான் முற்றும் மறந்து விட்டேன். நவராத்திரி உற்சவம் வந்தது. ஒவ்வொரு இரவிலும் மகாலிங்கேசுவரர் கோயிலில் உற்சவம் மிக வைபவமாய் நடைபெற்றது. ஒவ்வொரு இரவும் என் அம்மாளும் காந்திமதியும் கோயிலுக்குச் சென்றார்கள். நான் ஆறு நாளாகப் போகவில்லை. புத்தகங்களோடு குலவிக் கொண்டிருந்தேன். ஏழாம் நாள் என்னவோ கோயிலுக்குப் போகவேண்டுமென்று என்னுள் ஒரு எண்ணம் பிறந்தது. அவ்வாறே சென்றேன். வழியில் என் அம்மாளும் தங்கையும் வீட்டிற்குத் திரும்பி வருவதைக் கண்டேன். நான் கோயிலுக்குப்போய் வந்துவிடுவதாகச் சொன்னேன். "போய் வா, பத்திரமாய்ப் போய்ப் பத்திரமாய் வா" என்றாள் என்னம்மாள். கோயிலுக்கு வந்தேன். கொலுமண்டபத்தில் ஸ்திரீகள் ஒரு புறமாகவும், புருஷர்கள் ஒரு புறமாகவும் கூடியிருந்தனர். புருஷர்களோடு நானும் நின்றுகொண்டிருந்தேன். சற்று நேரத்தில் ஒரு குழப்பம் நிகழ்ந்தது.

ஸ்திரீகள் இருந்த இடத்திற் கருகே கற்பூரம் கப கப வென்று எரிந்துகொண்டிருந்தது. பேதைமையும் உவகையும் தேஜசும் பிரகாசிக்கும் முகத்தோடு ஒரு பாலிகை, சன்னிதிக்கெதிரேயிருந்து ஸ்திரீகளிருக்குமிடத்தை நோக்கிக் கற்பூர ஜ்வாலைக்கு மிகச் சமீபமாக ஓடிவந்தாள். அவள் வந்த அவசரத்தில் அவளது அழகிய ரோஜாநிறத்தாவணியின் முன்றானை அவிழ்ந்து கற்பூர ஜ்வாலையில் விழுந்துவிட்டது. "ஹாங்! ஹாங்! ஹாங்! ஹாங்!" என்றனர் சிலர். "மண்ணெடுத்து வாருங்கள்! மண்ணெடுத்து வாருங்கள்!" எனக் கூவினர் சிலர். "கீழே படுத்துப் புரளம்மா" என்றனர் சிலர். இவை போன்ற பலவித தொனிகளினால் பெருங் குழப்பந்தானுண்டாயிற்று. சிறுமி முதல்முதல் தன் தாவணியை உதறினாள். அதில் ஜ்வாலை அதிகமாகப் பரவிற்று. "அம்மா! அம்மா!" என்ற குரலுடன் சிறிது தூரம் ஓடினாள். பின்பு மதிமயங்கிக் கீழே உட்கார்ந்துவிட்டாள். ஜ்வாலை குபு குபு வென அவள் தாவணி வழியாய் ஏறி அவள் தரித்திருந்த சட்டையிற் பற்றிக்கொண்டது.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

66

அந்தோ! தேனினு மினிய தென்மொழி சின்னாளி லென்னுமோ!!

(வெண்டாமரை ந., 34-ம் பக்கத் தொடர்ச்சி.)

இக் காலத்தில் தமிழ்நூலென வெளிவருவனவற்றுள், தமிழ் வழக்குக் கொவ்வாத வடமொழிகளும் கிரந்த எழுத்தால் வேடமாறிய தமிழ்ச் சொற்களும் அவமே செறிந்து மலிந்து கிடப்பதென்பது அறிஞ ரெவரு மறியக் கிடந்ததே.

இதற்கு உதாரணங்கள் வேண்டின் முறங்கொண்டு வாரலாம்.

சென்னைத் துரைத்தனத்தாரால், செந்தமிழ் பயிலு மாணவர்களுக் கெனக் குறிப்பிட் டச்சிட்டிருக்கும் மூலபாடங்களிலேயே, ஆன்றோ ராண்ட தமிழ்மொழிகளை விகாரப் படுத்தியும் வெளிப்பகட்டான போலித் தமிழ் மொழிகளைப் புணர்த்தியு மிருத்தலின், ஏனையோரை நோவதனு லாய பயனென்னை? நமது தமிழ்மொழி ஆரியத்தின் வயிற்றிலே பிறந்து ஆரியத்தின் மடியிலே வளர்ந்ததென்னும் முற்றும் தவறான எண்ணமே, இத்தகைய அலட்சியத்திற்கும், அவமதிப்பிற்கும் காரணமாய் நிற்கின் றது. காய்த லுவத்த லகற்றி, மெய்ந்நூற்களை வழித் துணையாகக் கொண்டு, இந்துதேச ஆதி பூர்வ சரிதையைச் சற்று ஆராயின், நமது தமிழ் ஆரியத்திற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தென்பதும், வேறெம்மொழியினின்றும் பிறவாத முதன்மொழியென்பதும் அங்கையி னெல்லியங்கனிபோல் தெற்றென விளங்கும்.

புண்ணிய பூமியாகிய நமது இந்து தேசமே மனுகுலத்திற்குப் பிறப்பிடமாயிருந்து ஆதி மனிதர்கள் பேசிய மழலைச் சொல்லே காலத் தோடு திருந்தி வடபால் பாலி அல்லது பாளி எனவும், தென்பால் தமி ழெனவும் பெயர்பெற்றது.

வடபால் வழங்கிய *"பாலி – பாளி என்பது முதலில் சைன பௌத்த சங்கத்தின் பேரைக் குறிப்பதாகி, பின்னர் அச்சங்கத்தார் பேசும் பாஷைக்காயிற்று."

தென்பால் வழங்கிய தேனினு மினிய தமிழெனுமொழி, தலை யிடைச் சங்கக் காலத்தில் கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து மறைமுதல் கிளந்த வாயால் ஆய்தற்பாலதாய நலப்பாடுற்றுத் தெய்விகச் சீர்த்தியோடு விளங்கிற்று.

---

* மொழிநூல் பக்கம் 45.

யாழோசையையும் வெறுப்பிக்கும் இன்னிசையும், கரும்பையும் கைப்பிக்கும் சொற்சுவையும், உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் உவப்பைப் பெருக்கும் பொருட்பொலிவு முற்ற அமிழ்தினு மினிய தமிழெனு மடந்தை இருசுடர் வழங்கும் இவ்வைய முழுதும் பல்லாயிரமாண்டு தனியரசுசெலுத்தினள்.

கணக்கில் காப்பியங்களும் அளவிறந்த அரும் பெருநூற்களும் இவ் வரசிக்கு அணிகலமாக அமைந்திருந்தன.

இற்றைக்குத் தென்னிந்தியா வெனப்படும் இருநிலத்துடன் எழுநூற்றுக் காவதம் அகன்று கிடந்த நாற்பத்தொன்பது தமிழ்நாடுகள் தமிழ்ச் செல்விக்கு அரசிருக்கையா யிருந்தன.

ஆனுல், பண்டைக் காலத்தில் நமது தமிழுலகிற்குக் கொடியதோர் விபத்து நேர்ந்தது. மிகப்பெரிய சலப்பிரளயம் ஒன்று தோன்றி நாற்பத்தொன்பது தமிழ் நாடுகளையும் கடலகப்படுத்தியது. இக் கடற்கோள் நேர்ந்ததற்கு எவராலும் மறுக்கப் படாத பல்வேறு சான்றுகளுண்டு.

இந்து மகாசமுத்திரமெனப்படும் மாகடல் பல்லாயிரமாண்டுகளுக்கு முன் நிலப்பரப்பா யிருந்ததென்பது ஐரோப்பிய நூல்களி னாராய்ச்சியினின்று ஏற்படும் ஐயப்பாடற்ற உறுதியாகும்.

வெள்ளப் பெருக்கின் வரலாற்றை அதர்வண வேதத்திலும், கிறிஸ்துவ பைபிளிலும், யூத தல்முய்திலும், மகம்மதிய அல்கோரானிலும், பாரசீக ஜெந்தாவஸ்ததிலும், நாகரிகமும் நூற்செல்வமுமற்ற பிரஜைகளின் செவிவழக்காய் வழங்கிவரும் காதைகளிலுங் கூட வேறு வேறுவிதமாய்க் குறிப்பிட்டு உறுதிப்படுத்தி யிருப்பதைக் காணலாம்.

"குமரியாற்றுக்குத் தெற்கு நாற்பத்தொன்பதுநாடு கடல்கொண்டதாகலின்" என்று நச்சினுர்க்கினியர் தொல்காப்பிய எழுத்ததிகாரத்திலும், "நாற்பத்தொன்பது நாடும் கடல்கொண்டொழிதலால்" என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார வுரையிலும் கூறியுள்ளனர்.

மாகறல் கார்த்திகேய முதலியார் என்னும் கலை வல்லோர், உடல் பொருள் ஆவி மூன்றும் தமிழ்த் தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்து "அல்லும் பகலும் இடைவீடின்றி வருந்தி வருந்தியாராய்ந்து" தொகுத்து அத் தெய்வத்தி னடிக்கமலங்களில் சமர்ப்பித்துள்ள † மொழிநூல்

† ஸ்ரீமத் மாகறல் கார்த்திகேய முதலியார் அருளிய மொழிநூல் தமிழரெனும் ஆற்றலுடைய ஒவ்வொருவரும் அவசியம் அறிதற்பால

என்னும் அரும் பெருநூற்பால் தமிழ்நாட்டைக் கடல் கொண்ட வரலாறும் பிறவும் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதின் விளங்கும்.

இம் மாபெரிய கடற்கோளால் தண்டமிழ்ச் செல்வி விண்ணேறு பட்ட வான்மரம்போல் கலகலத்து நிலை குலைந்து நின்றாள்.

தலை இடைச்சங்கமிருந்த இடமெலாம் அலைகடலி லாழ்ந்தன. தமிழ்மடந்தை திருநடனஞ்செய்த அரங்கெலாம் முந்நீருண் மூழ்கின. அப் பாழ்ங்கடல் விழுங்கிய அரும் பெருந் தமிழ்நூற்களின் தொகையைக் கணிக்கவல்லவர் யாவர்? அளவிறந்தவை தம் பெயரும் பின் தெரியாவண்ணம் மண்ணுலகினின்று மறைந்தன. தமிழுலகில் எஞ்சி நின்ற நிலமும் கொஞ்சமே.

இக் கடற்கோட்குப் பல்லாயிரமாண்டுகட்குப் பின்னரே ஆதி தமிழ்மக்களினின்று பிரிந்து பல்வேறு திசைகளில் சிதறி வசித்துவந்தவர்களின் சந்ததியாரி லோர்பாலராய ஆரியர் பமீர் என்ற வடமலைப் பிரதேசத்தினின்று நமது இந்துதேசத்தில் சிந்துநதிக்கரையில்குடியேறினர்.

ஆகவே தமிழ்மொழி ஆரியத்திற்குக் கால வளவில் எத்துணையோ முற்பட்டதாகின்றது. இதற்குப் பல்வேறு சான்றுகளும் மேற்கோள்களும் உளவாயினும் இவண் விரிவஞ்சி விடுத்தனம்.

இந்து பூர்வசரிதத்தை முற்றும் ஆராய்ந்தவரும், சென்னை ராஜதானிக்குக் கவர்னர் பதவியை வகித்தவருமாகிய கனம் கிராண்டப் (Grant Duff) என்பவர், சென்னைச் சகலகலாசாலைப் பரீட்சைப் பட்டம் அளிக்குமோர் சமயத்தில் ஆரியர்குழாம் சூழ்ந்த மகா சபையில், § "தமிழர்களுடைய பழமையை நோக்குங்கால் ஆரியருடைய பழமையானது கணப்பொழுதிற்குமுன் பெற்ற நுட்டர் தந்திச்செய்தியை யொக்கும்" என்று எடுத்துக்கூறிய கூற்றுஒன்றே தமிழர், தமிழ் மொழியினுடைய பழமையைப் பசுமரத் தாணிபோல வலியுறுத்துகின்றதன்றோ?

(வரும்.)

பு. வே. தம்பி - புருஷோத்தமன்.

தாகும். இந்நூல் சென்னை வேப்பேரியில் விவேகாநந்த அக்ஷரசாலையில் பதிப்பித்துள்ளது. விலை ரூபா—2.

§ மொழிநூல் பக்கம் 9.

ஆனந்த முரசு.

முரசு — 2.

(வெண்டாமரை ௩, 15-ம் பக்கத் தொடர்ச்சி.)

"இப்படி யோடி ளுலு மென்னையன் விடுகின் ருனே
சொற்படி கேளாப் பிள்ளை துறக்கின்ற தாய்தா னுண்டோ
எப்படி யானுந் தன்ன தின்னருள் புகட்டு கின்றான்
அப்படி யான வைய னருளொடும் வாழி வாழி"

(திருவருட் கைவல்யம்)

மாயாபுரி வடக்கு வீதி. பகல் $11\frac{1}{2}$ மணி. விருத்த ரொருவர் ஓர் பெரிய மாளிகையின் வாயிலில் நின்று வெகு நேரமாய்க் கதவை விடாமல் தட்டிக்கொண்டிருந்தார். சுமார் $\frac{1}{2}$ மணி நேரமளவும் யாதொரு பதிலுமில்லை. பின்பு "இங்குச் சுதர்மனுமில்லை ஒருவனுமில்லை. இப்பொழுது அன்னியர்கட்கும் ஆண்டிகட்கு மிங் கலுவலுமில்லை." என்ற குரூரமான ஓர் கர்ஜனை உட்புறத்தினின்று உண்டானது. விருத்தர் வியப்படைந்து, சற்று நிதானித்துத் திரும்புகையில், 25 வயதுள்ள ஓர் யுவா எதிர் நின்று, "ஸ்வாமி, எது இந்த நேரத்தில் தாங்கள் கருணைகூர்ந்தது! இது எந்தையின் நல்வினைப் பயனென்று நன்கு விளங்குகின்றது. இவ் வில்லம் பரம பவித்ரமடைந்தது தங்கள் வரவு நல்வரவாகுக. வருக" என்று அன்பொழுகக் கைபிடித் தழைத்து, கதவைத் திறப்பித்து உட்சென்று வேண்டிய உபசாரணைகள் புரிந்தனன். முன் அவ்வளவு கொடிய சொல்புகன்றவன் அவ்வீட்டெஜமானனல்லனென்றும், கேவலம் அற்பச் சேவகனென்றும், வெளியினின்று வந்த யுவா, ஸுமதியென்று தன்னால் நாமகரணம் செய்யப் பெற்ற சுதர்மனின் அருமைப் புதல்வனென்றும் க்ஷணத்தி லறிந்தார் விருத்தர் நித்யானந்தர். ஆனால், பின் ஸுமதியால் நன்குபசரிக்கப்பட்டபடியால், முன் தமக் கேற்பட்ட அவமதிப்பை க்ஷமித்து, இது தற்காலத்தில் வெகு ஸகஜமென்று தம் மனதைத் தாமே சமாதானஞ் செய்துகொண்டு அவ்வீட்டு க்ஷேமாதிசயங்களை விசாரிக்கலானார்.

சுதர்மன் காலஞ்சென்று 6 திங்களாயின. ஸுமதியே அந்த மாளிகையின் ஸகல ஸ்வதந்திரன். ஸ்வாமி சற்றுநேரம் அவனுடன் பேசிக்கொண்டிருந்து பின் சரேலெனக் கிளம்பி, தாம் மட்டும் தனியே அவ்வீட்டு மாட்டுக்கொட்டிலுக்குச் சென்று சுற்றிப் பார்த்தார். அங்கோர் இளம் பசுங்கன்று துள்ளிக் குதித்து விளையாடிக்கொண்டிருந்தது.

அதைக் கண்ணுற்றதும், தம் பையினின்றும் கொஞ்சம் திருநீறெடுத்து அதன்மேல் வீசி நின்றார். உடனே, அக் கன்று தன் விளையாட்டெல்லாம் ஒடுங்கி அருகில் வந்து மண்டியிட்டு நமஸ்கரித்து "ஸ்வாமி, யான் எத்தனை முறை மறுப்பினும் தளர்வுறாது என்னை யாளவந்தீர்கள். ஆனால் என் பேதைமையை யென்சொல்வேன். யானிறக்கும் தறுவாயில், முன் ஸங்கல்பித்த மூன்று கோடி ரூபாயும் சேரவில்லையே, இன்னம் அதற்கு ரூபா 100 பாக்கி நிற்கின்றதே என்னும் குறைவுடன் துக்கித்துக்கொண்டே என் னுவியை நீத்தேனாதலின், எனக்கு இச் சென்மம் கிடைத்தது. ஆதலால், என் னிச்சை வசத்தால் கிடைத்த இச் சென்மத்தை வீணுக்காது உழைத்து என்னருமை மகனுக்கு ரூபா 100ம் சேர்த்துக் கொடுத்துப் பின் தங்க ளடிமையாகின்றேன். இது ஸத்யத்திலும் ஸத்யம் என்று தாழ்ந்து கெஞ்சியது. ஸ்வாமி உடனே உட்சென்று, அவ் வெஜமானனை விளித்து, "அப்பா, எனக்கு யாகத்திற்குப் பால் தேவையுண்டு. உன் வீட்டுப் பசுவைக் கொடுப்பையேல், உனக்கு வேண்டிய விலை கொடுத்துப் பெற்றுக்கொள்வேன். மேலும், அதன் கன்றுக்கென்று பிரத்தியேகமாய் ரூபா 100ம் அளிப்பேன். உன் மனமெப்படி" என்று வினவ, ஸுமதி "ஆரிய, தங்கள் சோதனையை யான் வகிக்கத் தாமுளனோ? என்னுடல் பொரு ளாவியெல்லாம் தமதன்றோ? அங்ஙனமிருக்க, தாம் இங்ஙனம் என் னனுமதியை நாடிய காரணமென்ன" என்று நடுநடுங்கிப் பாதத்தில் வீழ்ந்தான். சுதர்மனுக்கும் அவன் மகனுக்கும் உள்ள மன நேர்மையின் வித்தியாசத்தை யோசித்துப் பாருங்கள். நாம் எவ்வளவிற் கெவ்வளவு அதிக காலம் இப்புவியில் தங்குகின்றோமோ, அவ்வளவுக் கவ்வளவு இச்சம்சாரமானது நம்மைப் பலமான சங்கிலியால் பலமாய்ப் பந்தப்படுத்துகின்றது. சுமதியோ அதி பால்யன். தன் தகப்பனால் சேகரிக்கப்பட்ட ஏராளமான திரவியமுண்டு. இம் மூடவுலகம் அனுபவிப்பதாகச் சொல்லும் இவ் வுலக வின்பங்களில் ஒன்றேனும் அனுபவித்திலன். அங்ஙன மிருந்தும், ஸ்வாமி ஒரு பசுவை யாசிக்க, அதன் முன்னிட்டுத் தன் னுடல் பொரு ளாவி மூன்றையும் மனப்பூர்வமாய் அர்ப்பணம் செய்த இப் புண்ணியனை இப் பொல்லா வுலகம் நகைக்கும். ஆனால், அவன் திருநாமத்தை எல்லாம் வல்ல இறைவன் தாரக மந்திரமாகக் கருதிச் சதா தியானித்துப் பரமானந்த மடைகின்றானென்று மறைகள் அறைகின்றன.

இங்ஙனம் வணங்கி நின்ற சுமதியை ஸ்வாமி யருட்கண் சாத்தி, "வத்ஸ, நீ நவின்றது பயனுடையதாகுக. உன் வாக்கைச் சகல தேவர்களும் அறிகிறார்கள். ஆதலால், நீ யெனக் குரிமையாக்கிய உன் செல்வ

மனைத்தும் அப்படியே விடுத்து இப்பசுங் கன்றுடன் எனைத் தொடர்தி" என்றியம்பி முன்னடந்தார். சுமதி சற்றேனும் தயங்கினானில்லை. உடனே தன் மேல் வஸ்திரத்தால் அக்கன்றைப் பிணித்து, இடையிலுள்ள ஒரே வஸ்திரத்துடன், தன் வீடு, செல்வம் யாவையும் அக்கணமே மறந்து ஸ்வாமியைப் பின்சென்று ஓர் தபோவன மேகி, ஸ்வாமியினேவலால் அக்கன்றை அங்கு விடுத்து, ஓர் மரத்தடி யமர்ந்து உபதேசம் பெற்று, அற்புத ஸமாதியுற்று, நாம் ஒவ்வொருவரும் அடையவேண்டிய பரம புருஷார்த்தத்தை யடைந்தான். பசுங் கன்றோ, பெரிதாகி, நன்றாய் வளர்ந்து, அவ்வனத் தமர்ந்துள்ள தபோதனர்கட்குப் பால் முதலியன அளித்து, பெரியோர்கள் சேவையாலும், குரு கடாக்ஷத்தாலும், அச்சென்மம் விடுத்து உத்தம மகரிஷியின் புதல்வனா யுதித்து, ஸாதன சதுஷ்டய ஸம்பன்னனாய், தன்னில்லம் விடுத்து, எம் கருணை வள்ளலாம் நித்யானந்தரை யடுத்து, வெகு காலம் அசஞ்சல பக்தி செய்து, மர்க்கட நியாயமாய் விடாது தொண்டுபுரிந்து அன்னவ ரருளால் உத்தம பதவி யடைந்தது.

M. V. சுப்ரமண்ய ஐயர்.

ஓர் ஐயம்.

திருக்குடந்தை என்னும் கும்பகோணத்தில், நமது சைவ சமயாசாரியர்களால் தேவாரம் பாடப் பெற்றவை (1) குடமூக்கு, (2) குடந்தை கீழ்க்கோட்டம், (3) திருக்காரோணம் என்னும் இம்மூன்று தலங்களே. இவற்றுள், திருக்குடமூக்கு ஆதிகும்பேசுவரர் ஆலயத்தைக் குறிக்கும்; திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் நாகேசுவரர் ஆலயத்தைக் குறிக்கும்; எஞ்சிய திருக்காரோணம் எத்தலத்தைக் குறிக்கின்றது என்பது தெரியவில்லை. இவ்வூரில் விசாரிக்க, ஒரு சாரார் சோமேசர் ஆலய மென்றும், மற்றொருசாரார் காசிவிசுவேசர் ஆலயமென்றும் சொல்லுகிறார்கள்.

ஆதலின், இதைக் கண்ணுறும் அறிஞர்கள், திருக்காரோணம் என்ற பெயர் எத் தலத்திற்கு உரியது என்பதை ஆன்றோர் வாக்கியங்களால் ஆதாரம் காட்டி என் ஐயத்தைத் தீர்ப்பார்களென்று இக் கலைமகள் மூலமாக வெளியிடலானேன்.

குடந்தைவாசி.

இலக்கியப் பகுதி.

கலைமகள் தோத்திர மஞ்சரி.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த

சகல கலாவல்லி மாலை.

கலித்துறை.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித் தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. (1)

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனகக் குழையுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. (2)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. (3)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. (4)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
னெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. (5)

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யா
னெண்ணும் பொழுதெளி தெய்நல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே. (6)

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. (7)

சொல்விற் பனமு மவதா னமுங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. (8)

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே. (9)

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. (10)

[குறிப்பு:— இது சில்லறைக்கோவை என்னும் பிரபந்தத் திரட்டிலிருந்து பெயர்க்கப்பட்டது. இப் பனுவல்களைப் பத்தியுடன் பாடுவோர்களுக்கு அச் சாரதாம்பாள் பலவித பாஷைகளையும் இன்னும் அட்டாவதானம் முதலியவைகளையும் கொடுத்து அவர்கள் நாவில் நிருத்தமிடும் என்பதிற் சற்றுஞ் சந்தேகமில்லை.]

வ. விநாயகர் தம்பிபத்தர்.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

சாத்திரப் பகுதி.

முக்திகோபநிஷத்.

(வெண்டாமரை ௩, 45-ம் பக்கத் தொடர்ச்சி.)

(அநுமான் கேட்கின்றார்.)

9. ஏ ராம! வேதங்கள் எத்தனை விதங்களுள்ளன? அவற்றிற்குச் சாகைகள் எத்தனை? ஏ ராகவ! அச் சாகைகளில் உபநிஷத்துக்கள் எத்

தனை யிருக்கின்றன? தயைசெய்து தத்துவ சாம்பிரதாயமாகச் சொல்லுக.

வேதங்க ளெத்தனை, வேத சாகைக ளெத்தனை, அவற்றின் உபநிஷத்துக்க ளெத்தனை? இவற்றைச் சாங்கமாகத் தயைசெய்து சொல்லுக என்றாரென்க.

(ஸ்ரீராமர் கூறுகின்றார்.)

10. வேதங்கள் ருக்வேத முதலிய விபாகங்களாலே நான்கு விதங்களாகச் சொல்லப்பட்டன. அவ் வேதங்களில் சாகைகள் அநேக விதங்கள் உள்ளன அல்லவா. அச் சாகைகளில் உபநிஷத்துக்கள் அவ்விதமாகவே அநேக விதங்களா யுள்ளன.

வேதங்கள் ருக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்னும் பேதங்களால் நான்காகி, ஒவ்வொரு வேதத்திற்கும் அநேக சாகைக ளுண்டாகி, அச் சாகைக ளனைத்திற்கும் உபநிஷத்துக்கள் அநேகங்களா யுள்ளன என்றாரென்க.

11. ஏ வாயு குமாரா! ருக்வேதத்திற்கு, சாகைகள் இருபத்தொன்று என்னும் எண்ணையுடையன. யஜுர்வேதத்திற்குச் சாகைகள் நூற்றொன்பதாகும்.

ருக்வேதத்திற்கு இருபத்தொரு சாகைகளும், யஜுர்வேதத்திற்கு நூற்றொன்பது சாகைகளும் உள்ளன என்றாரென்க.

12. உட்புறப் பகையைத் தபிக்கச் செய்யும் ஏ ஆஞ்சனேயா! ஏ வானரோத்தமா! சாம வேதத்திற்குச் சாகைகள் ஆயிரக் கணக்கால் பிறந்தன. அதர்வண வேதத்திற்குச் சாகைகள் பேதத்தினால் ஐம்பது ஆகின்றன.

சாம வேதத்திற்கு ஆயிரம் சாகைகளும் அதர்வண வேதத்திற்கு ஐம்பது சாகைகளும் உள்ளன என்றாரென்க.

13. ஒவ்வொரு சாகைக்கும் ஒவ்வொரு உபநிஷத்து உள்ளதென்பது சித்தாந்தம். அவ் வுபநிஷத்துக்களில் ஒரு ருக் ஆயினும் எவன் என்னிடத்துப் பக்தியால் படிக்கின்றானோ அவன் முனிவர்களுக்கும் அடைதற்கரிய எனது சாயுஜ்ய முக்தியை அடைகின்றான்.

ஒவ்வொரு சாகைக்கும் ஒவ்வொரு உபநிஷத்துண்டு; அவற்றுள் ஒரு ருக்கையேனும் என்னிடத்துள்ள பக்தியினால் படிப்பவர்களுக்கு முனிவர்களுக்கும் துர்லபமான சாயுஜ்ய முக்தி யுண்டாகுமென்றாரென்க.

(அநுமான் கேட்கின்றார்.)

14. ஏ ராமசந்திர! சில முனிசிரேஷ்டர்கள் முக்தி ஒன்றே யென்று சொன்னார்கள். சாலோக்ய சாரூப்ய சாமீப்ய சாயுஜ்யங்களி னுடைய பேதங்களால் முக்தி நான்கு விதங்களுள்ளனவென்றும் சொல்லப்பட்டது. சிலர் உனது நாம பஜனத்தினாலே முக்தி யுண்டாமென்றும், வேறு சிலர் காசியில் தாரகோபதேசத்தினாலே முக்தி யுண்டாமென்றும், மற்றுஞ் சிலர் ஆத்மாநாத்ம விசாரத்தினாலே முக்தி யுண்டாமென்றும், இன்னுஞ் சிலர் பக்தி யோகத்தினாலும் முக்தி யுண்டாமென்றும், வேறு சில மகரிஷிகள் உபநிஷத் மகா வாக்யார்த்தங்களுடைய விமரிசையினால் முக்தியென்றும் சொன்னார்கள்.

சிலர் முக்தி ஒரேவிதமென்றும், சிலர் அம் முக்தி சாலோக்ய முதலான பேதங்களுடையதென்றும், வேறு சிலர், உனது நாம பஜனம், காசியில் தாரகோபதேசம், சாங்கிய யோகம், பக்தி யோகம், மகா வாக்யார்த்த விசாரம் இவை தனித்தனி முக்திக்கு முக்கிய சாதனங்களென்றும் கூறினார்களென்று அநுமான் கேட்டனரென்க.

(ஸ்ரீராமர் கூறுகின்றார்.)

15. ஆஞ்சனேயா! பரமாத்ம ஸ்வரூபமான கைவல்ய முக்தி ஒன்றேயாகும்.

உபாசனா சாத்யமான முக்திகளுக்குப் பேதமுள்ளதே யன்றி, கைவல்ய முக்தியொன்றே பாரமார்த்திக மென்றாரென்க.

16. ஏ வானரோத்தம! மனிதன், துராசாரங்களில் ஆசக்தி யுடையவனாயினும் எனது நாம கீர்த்தனத்தினாலே சாலோக்ய முக்தியை அடைவானேயன்றி, கர்ம நிர்மிதங்களான சுவர்க்காதி லோகங்களை அடையமாட்டான்.

எனது நாம பஜனம் செய்யும் மனிதன் பிராரப்தகர்ம பிராபல்யத்தினாலே பாபாசாரங்களில் இச்சையுடையவனாயினும், பஜனத்தினாலே அப் பாவம் நீங்கிச் சாலோக்ய முக்தியை யடைவானேயன்றி, கர்ம நிர்மிதங்களும் நசுவரங்களுமான சுவர்க்காதி லோகங்களை யடையமாட்டான் என்றாரென்க.

17. காசிப் பட்டணத்தில் பிரம்மநாளமென்னும் பிரதேசத்தில் மாணகாலத்தில் எந்த மனிதன் எனது தாரக மந்திரோபதேசத்தை யடைவானோ அந்த மனிதன் புனராவிர்த்தியற்ற மோட்சத்தை யடைகின்றான்.

18. காசிப் பட்டணத்தில் பஞ்ச குரோசங்களில் எந்த ஸ்தலத்திலானாலும் மரணம் உண்டாகையில் அக் காசிவிசுவநாத சுவாமி மரணமடைகின்ற அப் பிராணியின் வலது செவியில் என்னுடைய தாரக மந்திரத்தை உபதேசிக்கின்றார்.

17, 18. இவ் விரண்டு சுலோகங்கட்கு வாச்சியார்த்தம் மாத்திரம் இங்குச் சொல்லப்பட்டது; இவற்றிற்கு லக்ஷியார்த்தம் சற்குரு முகமாகத் தெரிந்துகொள்ளத்தக்கது.

(வரும்.)

ஓர் ஆரியன்.

ஞான ராமாயணம்.

(வெண்டாமரை ௩, 21-ம் பக்கத் தொடர்ச்சி.)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வசையுறு விபசாரச்சிலை மிதித்து
மருவுமா சாரமென் மடந்தை
திசைபுக ழகலி யைப்புகழ்ந் தேத்தித்
திகழுமே காந்தமென் மிதிலை
யசைவறு சாந்த சனகரை நண்ணி
யங்கெழு பொறுமையாஞ் சாபம்
விசையுட னொசித்தா னந்தமென் சனகி
மென்கரம் பற்றினன் மேலோன். (4)

வருமத பரசு ராமனை யென்றும்
வாராவழி யெதிர்த்துடன் முடுக்கி
யரும்பெறற் கரிய வீடுகோ சலஞ்சென்
றங்குயிர் நானல வென்றே
யொருபழம் பிரம தயாத னோடுற்
றுலவுசீ வத்வம றலெனுந்
தருமணி மகுடந் தாங்கிட விசைந்தான்
றனிமறை தேடிரா கவனே. (5)

நாடகக் கிரியை மானுங்கை கேசி
நங்கையின் சலனமென் னேவல்
பீடற வணுகப் பிரமநல் லரசைப்
பிரிந்தவன் முத்திகோ சலமா
நாடதைத் துறந்து நாட்டுவை ராக்ய
நலமளி துணையிலக் குவன்வான்
றேடரு னந்த மாகுநற் சீதை
தொடரவே கடுவழி சென்ருன். (6)

(தொடரும்.)

செந்தமிழ்க்கவி, K. V. இராமசந்திர ஐயர்.

கலைமகள் கழகத்திற்கு ஓர் நன்கொடை.

சென்னை, சைதாப்பேட்டை ஸ்ரீமான் மாகறல் கார்த்திகேய முதலியாரவர்கள், நமது கலைமகள் கழகத்தின் புத்தக நிலையத்திற்கு, "மொழிநூல்" என்னும் அரிய தமிழ் நூலொன்று அன்புகூர்ந்து நன்கொடை யளித்தார்கள்.

அவர்கள் அன்புடைமைக்கு, புதுவைக் கலைமகள் கழகத்தார் பெரிதும் நன்றி செலுத்துகின்ருர்கள்.

தி. திருப்புளிசாமி ஐயர்
கழகத்தின் காரியதரிசி.

புத்தக வரவு.

கமலினி.

இஃது ஒரு இந்துப் பெண்மணியால் எழுதப்பட்ட ஒரு கதைப் புத்தகம். படிக்க இனிமையைத் தருகின்றது.

சொற்றவறுதலின் துன்பமும், பொருளாசையின் பொல்லாங்கும், பொய் பேசுதலின் இழிவும், உடன்பிறந்தார் கடமையும், தீச்சேர்க்

கையின் தீமையும், நற்சார்பின் நன்மையும், தீயவரடையும் தீங்கும், அவ ரவர்கள் இயற்கைக் குணங்களும், பிறவும் இக் கதையில் நன்கு வெளி யாகின்றன.

இதன் விலை அணா. 8.

ப—ர்.

சமாசாரம்.

புதுவை, பகவத்கீத சன்மார்க்க சபையின் 15-வது வருடோற்சவம்.

புதுவை, பகவத்கீத சன்மார்க்க சபையில், மேற்படி சபையின் 15-வது வருடோற்சவம் மூன்று தினங்களில் கொண்டாடப்பட்டது.

30-1-1915 சனிக்கிழமை காலையில், சபையார் பஜனைகோஷ்டி யோடு ஸ்ரீவேதபுரீசுவரர் ஆலயத்திற்குச் சென்று ஸ்ரீபழநியாண்டவருக்கு அபிஷேகாலங்கார தீபாராதனைகள் செய்வித்தனர். மாலை 5-மணிக்குச் சபை ஆரம்பிக்கப்பட்டது. தேவார பாராயணமும், அறிக்கைப் பத்திரம் வாசித்தலும் முடிந்தவுடன், அக்கிராசனம் வகித்த புதுவை கலோனியல் காலேஜ் ப்ரொபஸர் பிரம்மஸ்ரீ சுவாமிநாத தீக்ஷிதர், B. A. L. T. அவர்க ளால் முன்னுரை கூறப்பட்டது. பின்னர், சென்னை Prof. ஸ்ரீமான் V. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள், B. A., F. T. S. "சிவபக்தி, சிவயோகம், சிவஞானம்" என்பதுபற்றியும், புதுவை கவர்ன்மெண்ட் ஜெனரல் செக்ரெடேரியட் ஆபீஸ் ஸ்ரீமான் ஆ. வே. முத்தையமுதலியா ரவர்கள் B. A., F. T. S. "சிதம்பர ரகசியம் பஞ்சகிர்த்திய நடனம்" என்பதுபற்றியும் பிரசங்கித்தார்கள்.

31-1-1915 ஞாயிற்றுக்கிழமை காலையில், ஷை ஸ்ரீ ஆ. வே. முத் தைய முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ், புதுவைக் கலைமகள் கழகத்தின் காரியதரிசி ஸ்ரீமான் தி. திருப்புளிசாமி ஐயரவர்கள் "அப் பூதியடிகள் மான்மியம்" என்பதைப்பற்றி உபந்நியசித்தார்கள். மாலை யில், புதுவை ஸ்ரீமான் ஜெகநாதநாயடு அவர்களால் "அடக்கமுடைமை" என்பதும், கலைமகள் பத்திராதிபர் ஸ்ரீமான் சி. பங்காருப் பத்தரவர்க ளால் "துருபக்தி" யென்பதும், சென்னை ஸ்ரீமான் N. P. நடேசமுதலி

379

யார், B. A. அவர்களால் "விக்கிரகாராதனை" என்பதும் ஷை ஸ்ரீ சுவாமிநாத தீக்ஷிதரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் உபந்நியசிக்கப்பட்டன.

1-2-1915 திங்கட்கிழமை மாலையில், ஸ்ரீ ஆ. வே. முத்தைய முதலியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ், ஸ்ரீ சுவாமிநாத தீக்ஷிதரவர்கள் "முயற்சி" என்பதுபற்றியும், ஷை தீக்ஷிதரவர்கள் அக்கிராசனத்தின்கீழ், வண்டிப்பாளையம் ஸ்ரீமான் ருத்ரசாமி ஐயரவர்கள் "அன்பு" என்பதுபற்றியும் உபந்நியசித்தார்கள். சபைத் தலைவர் முடிவுரை கூறினதும், காரியதரிசி வந்தனம் சொல்ல, தேவார பாராயணத்தோடு சபை பூர்த்தியடைந்தது.

பார்த்து மகிழ்ந்தோன்.

புதுவை ஸ்ரீ கிருஷ்ணவாசகசாலையின் 4-வது வருஷோத்சவம்.

ஷை வருஷோத்சவத்தை முன்னிட்டு, புதுவைக் காளத்தீசுரர் கோயில் வீதி சொஸியெத்தே ப்ரோக்ரேஸீஸ்தில், அடியிற் கண்டவாறு உபன்யாசங்கள் நடைபெறும்.

2-4-15 வெள்ளிக்கிழமை மாலை,

$5\frac{3}{4}$ - 6 சங்கீதம்.

6 - $6\frac{1}{4}$ அக்கிராசனாதிபதி முன்னுரையும், காரியதரிசி வருடாந்த அறிக்கைப் பத்திரம் வாசித்தலும்.

$6\frac{1}{4}$ - 7 சேரிட மறிந்து சேர் — ஸ்ரீ சுப்பராய ஐயர் அவர்கள்.

7 - 8 பரோபகாரம் — ஸ்ரீ சி. பங்காருப்பத்தர் அவர்கள்.

3-4-15 சனிக்கிழமை மாலை,

$5\frac{3}{4}$ - 6 சங்கீதம்.

6 - 7 பொறுமை — ஸ்ரீ திருப்புளிசாமி ஐயர் அவர்கள்.

7 - 8 சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் — ஸ்ரீ A. V. முத்தைய முதலியார் அவர்கள்.

அக்கிராசனர் முடிவுரை முதலியன.

திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ சரஸ்வதி விலாச சபையின் 2-வது ஆண்டு நிறைவு விழா.

ஸ்ரீ சரஸ்வதி விலாச சபையின் 2-வது ஆண்டு நிறைவுவிழா, திருப்பாதிரிப்புலியூரில், ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக

மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் அக்கிராசனத்தின்கீழ் மிகு சிறப்பாக நடைபெற்றது.

20 — 3 — 1915 சனிக்கிழமை பகல் ஒருமணிக்கு, சபாநாயகராகிய ஸ்ரீ ஞானியார் மடாலயத்துச் சுவாமிகளை மடத்தினின்றும் மேனாவில் எழுந்தருளப்பண்ணி மிக்க விபவத்தோடு வீதிவலமாக வரவேற்றார்கள். 2 மணிக்குச் சபை கூடிற்று. தேவார பாராயணமும் அறிக்கைப் பத்திரம் வாசித்தலும் முடிந்தவுடன், சுவாமிகள் முன்னுரை கூறினார்கள். பின்னர், தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளை யவர்களால் "ஈசுவர உபாசனை" என்பதும், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஆ. பா. ரங்கையபத்த ரவர்களால் 'நட்பு' என்பதும், செங்கற்பட்டு, பொன்மார் ஸ்ரீ நடேசமுதலியா ரவர்களால் "பெரியாரைத் துணைக்கோள்" என்பதும், வண்டிப்பாளையம் ஸ்ரீ வை. கந்தசாமிமுதலியா ரவர்களால் "ஆலய வழிபாடு" என்பதும், திருக்கோவலூர் ஸ்ரீ ம. ரா. குமாரசாமிப்பிள்ளை யவர்களால் "அடியார் பெருமை" என்பதும் பிரசங்கிக்கப்பட்டன. சபைத் தலைவரவர்கள் பின்னுரை கூறினார்கள். தேவார பாராயணத்தோடு சபை கலைந்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணிக்குச் சபை கூடினதும் தேவார பாராயணம் நடைபெற்றது. பின்னர், புதுவை ஸ்ரீ சி. பங்காருப் பத்த ரவர்கள் "நல்லோரிணக்கம்" என்பதைப்பற்றியும், ஸ்ரீ பாலசுந்தர நாயனு ரவர்கள் "மக்கள் யார்" என்பதைப்பற்றியும், சிதம்பரம் ஸ்ரீ நடேசதேசிக ரவர்கள் "தெய்வச் சேக்கிழார்" என்பதைப்பற்றியும், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ T. M. கிருஷ்ணசாமி செட்டியா ரவர்கள் 'அன்பு' என்பதைப்பற்றியும், சென்னை ஸ்ரீ S. சச்சிதாநந்தம் பிள்ளையவர்கள் B. A. L. T. "இந்து சமயமும் மேல்நாட்டுத் தத்துவ நூல்களும்" என்பதைப்பற்றியும், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ வீ. சோமசுந்தரசெட்டியா ரவர்கள் 'அருமை' என்பதைப்பற்றியும், செங்கற்பட்டு, பொன்மார் ஸ்ரீ நடேசமுதலியா ரவர்கள் 'கேள்வி' என்பதைப்பற்றியும், தூத்துக்குடி ஸ்ரீ பொ. முத்தையபிள்ளை யவர்கள் 'இல்லறம்' என்பதைப்பற்றியும் உபன்னியசித்தார்கள்.

உடனே சபைத் தலைவராகிய சுவாமிகள் முடிவுரைப் பிரசங்கம் செய்து வந்திருந்தவர்கள் யாவரையும் ஆநந்தக் கடலில் மூழ்கச் செய்துவிட்டார்கள். தேவார பாராயணத்தோடு சபை சம்பூர்த்தி யடைந்தது.

கண்டுகேளித்தோன்.

81

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

பி. சுப்பருய், ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.

தயவுசெய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பருயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

6. சுகந்த கூந்தல் தைலம்:— இத்தைலத்தால் தலைமயிர், மீசை, கண் இமை வெகுசெழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும் வளரும். கண்களைக் குளிரச்செய்யும், சகல கண்ணோய்களும், தலைநோய்களும் நீங்கும். செம்பட்டை மயிர் கறுக்கும். மயிர் உதிராமல் காக்கும். கண்களுக்குப் பிரகாசத்தைத் தரும். விலை புட்டி 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

7. நேத்திர பிந்து:— கண்ணோய், கண் குற்றல், கூசல், நீர்வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைக்கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளின் வலி, கண்புகைச்சல் இவைகளை குணப்படுத்தும். மாணாக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலைசெய்பவர்களுக்கும் வெகு சிறந்த ஔஷதம். மருந்து உபயோகித்தால் கண்ணாடிபோடவேண்டியது அனாவசியம். சீசா 1-க்கு விலை அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

8. கர்னபிந்து:— காதில் சீழ்வடிதல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளை குணமாக்

கும். செவி நன்றாய் கேட்கும். சீசா 1-க்கு விலை அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

9. சர்வபடை சம்ஹாரன்:— இடுப்பு, துடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி, ஓயாத நமச்சலைத்தந்து, வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும் மேகப்படை, சொறி, சிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. செலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

10. பேதி மாத்திரைகள்:— வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள், சகல வாயு, மலச்சிக்கல், அக்கினிமாந்தம், வாதம், கை, கால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு அணா 8. வி. பி. செலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

11. ஜுவர சம்ஹாரி:— தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர் சுரம், முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்தி சுரம், மாலை சுரம், மார்வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்புவெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலாமுறை சுரம் முதலிய சகல சுரங்களை அடியோடு போக்கும். டப்பா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

12. உரோம சம்ஹாரி:— இந்தச் சூரணத்தை மயிருள்ள இடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா 4 ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

P. SUBBAROY,

AYURVEDIC PHARMACY,

Sri Venkatesa Perumal Koil Sannathy,

TANJORE.

83

சோதிட விளம்பரம்.

ஆரிய நேயர்காள்!

தங்கட்கு ஜாதகங்களின் குறிப்பெழுத வேண்டினும், (அல்லது) பலனெழுத வேண்டினும், ஆலயம், மனை முதலியவைகளுக்குப் பொருத்தபலன் எடுத்தெழுத வேண்டினும், புத்திர தோஷ நிவர்த்திக்கு (கர்மநாடிப்படி) தோஷநிவர்த்தி சாந்தி விதிகள் எடுத்தெழுத வேண்டினும், (அல்லது) நஷ்டஜாதகம் கணித்துப் பலனெழுத வேண்டினும் அடியிற் குறித்த விடத்திற் கெழுதி விபரம் தெரிந்துகொள்ளலாம். விபரம் அறிய விரும்புவோர் ரிப்ளை கார்டு அல்லது ½ அணா லேபிள் அனுப்பவேண்டும்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி, ஜோதிஷர்,

ஆரியன் சோதிடசாலைத்தலைவர், திருவாரூர்.

நற்சாக்ஷிப் பத்திரம்.

திருவாரூர்:— ஆரியன் சோதிடசாலைத்தலைவர்

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி ஜோதிஷரவர்களுக்கு.

ஐயா! தாங்கள் எடுத்துக் காட்டிய சாஸ்திர நியாயம் எல்லாம் சரியானதே. எனக்கு வரவர உடம்பு மிகவும் சௌக்கியமாயிருக்கின்றது. தாங்கள் எனக்குச் சொல்லிவரும் சோதிடபலன்கள் எல்லாம் சரிவர ஒத்திருக்கின்றன.

இங்ஙனம் தங்கள்

* **V. தங்கவேலுசாமித்தேவர்,** வித்வான் மாப்பிள்ளை,

23 — 4 — 912 கந்த விலாசம், இராமநாதபுரம்.

* ஸ்ரீமத் பாஸ்கரசேதுபதி மகாராஜாவின் அருமை மைத்துனர்.

திருவள்ளுவர் மடாலய சாதுமகாசங்கம்.

இச் சங்கம் ஆனந்த வருஷ சித்திரை மீ 24-ம் வ புதன் கிழமை ஸ்ரீதியாகேசன் சந்நிதியில் எம்மால் ஏற்படுத்தப்பெற்றது.

இச் சங்கத்தின் நோக்கமாவன:— ஸ்ரீ தியாகேசன் திருவிழாக்காலத்தில் (பங்குனிமாதத்தில்) சுமார் 1000 அடியார்களுக்கு அன்னம் அருத்தலும் தாகநீர் அளித்துத் தாகசாந்தி செய்வித்தலுமாம்.

முக்கிய வேண்டுகோள்:— இதனைக்கண்ணுறும் புண்ணிய சீலர்கள் ஷை தர்மத்திற்குதவும் பொருளுதவியை எமக்குத் தபால் மூலமாய் முன்னடியே அனுப்பி உபகரிக்கக்கோருகிறேன்.

V. வைத்திநாதஸ்வாமி ஸ்தபதி, ஜோதிஷர்,

23–1–15 சாதுமகாசங்கத்தலைவர், திருவாரூர்.

தலைமயிர் நரைத்து ஏன் கிழவர்களைப்போல் காணப்படுகிறீர்கள் ?

எங்கள் **தர்பார் கேச கலாபத்தை**

ஒருதரம் உபயோகிப்பதனால் எந்தக் காரணத்தினால் உண்டான நரைத்த கூந்தலைக் கருக்கச் செய்யும். இது கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும், கூந்தலுக்குப் பலஹீனத்தைப் போக்கடித்து அவைகளுக்குப் பலத்தையும் கொடுக்கும். சர்மத்துக்கு எவ்வித தொந்தரவில்லாமல் அதி அற்புதமாய் வேலைசெய்யும். ஒரு தடவை தருவித்துப் பார்த்தால் நம்பிக்கை தெரியும்.

புட்டி விலை புருஷ் உடன் ரூ. 1 — 0 — 0
போஸ்டேஜ் பிரத்தியேகம் 0 — 4 — 0

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப்.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும் ரோமத்தில் பூசுவதனால் தேகத்தின் சர்மத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்.

ஏஜெண்டுகள் தேவை.

3 கேசு உள்ள பெட்டி 1-க்கு 0 — 14 — 0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1 — 10 — 0

வி. ஏ. எஸ். பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

85

சந்திரசேகரன் சரித்திரம்.

இஃது ஓர் மகானுபாவனால் எழுதப்பட்ட "திரிகால மாயப் பிரசன்ன நவீனம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது புத்தகம். இப் புத்தகம் இடைக்கிடையே சந்தர்ப்பத்திற் கேற்ற வர்ணமெட்டுகளமைந்த பல இசைப்பாட்டுகளுடன் கல்விமான்களால் ஒரு கற்பனை நாடகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. இக் கதை படிக்கப் படிக்க இன்பந் தருவதுமன்றி, ஆண்மக்களும் பெண்மக்களும் உலகத்தில் அறிந்து நடக்கவேண்டிய நீதி பலவற்றைக் கற்பிக்கும் ஓர் உத்தம ஆசிரியன் போன்றும் விளங்குவது. எந்த மதத்தினர்களும், ஆண் பெண் சிறுவர் முதலியயாவர்களும் படித்துப் பயனடையும்படி மிக எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. பலவிதமாகச் சொல்வதிற் பயனென்னை? உண்மையில் இப் புத்தகம் படிப்பவர்களுக்கே இதன் இன்பம் விளங்கும்.

புத்தகம் நல்ல கிளேஸ் கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களால் மிக அழகாக அச்சிட்டு பயிண்டு செய்யப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இதன் விலை அணு 6.

ஜெகசேகர சத்தியவதனி.

மேற்கூறியதுபோலவே இதுவும் "பஞ்சாஸம்" என்ற புத்தக வரிசையில் முதலாவது ரஸமாகிய ஒரு நாவல். இப் புத்தகம் மார்ச் மாதத்தில் வெளிவரும். இதன் விலை அணு 12.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதி முற்பண மனுப்பியேனும், வி. பி. மூலமாகவேனும் பெற்றுக் கொள்ளலாம்.

போன். நல்லத்தம்பிமுதலியார்

No. 34. ஆநந்தரங்கப்பிள்ளை வீதி,

புதுச்சேரி.

அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்ற

ராஜா சுந்தரி ரோஜா.

கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

50 இனம் சாமான்களுடன் டின் 1-க்கு ரூ. 1—0—0.

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்றும், உதிர்ந்துபோகாமலிருக்கவேண்டுமென்றும், விரும்புகிற ஸ்திரீகள் சாதாரணமாய் கடைகளில் கிடைக்கக்கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் குணத்தை தெரிந்து வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவி சீவிக்கொண்டால் வெகுதூரம் இதின் வாசனை வீசும். கூந்தலை நீளமாய் வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத் தணித்துக் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்திசெய்து, கண்களில் நீர்வடிதல், தலைமயிர்சுண்டு புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தலைவலி, சொறிசிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமை தெரியும்.

இது தேசமெங்கும் நல்லபெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாக்ஷியாகும்.

இனம் சாமான்களின் விபரம் :— ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6. குங்குமச்சிமிழ் 1. மைச்சிமிழ் 1. அழகான முகம் பார்க்கும் கண்ணாடி 1. தாம்பூல மாத்திரைகள் 30. தந்தச்சீப்பு 1. ராஜா ராணி கார்னேஷன் பெட்டி 1. ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6. அத்தர்பில்லை 1. சந்தனப்பில்லை 1. ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜாராணி உள்ள சுந்தரமான புரூக்ஸ் 1.

தைரியலட்சுமி அண்டுகோ.

3, இருளப்பன் தெரு, மதராஸ்.